# இலக்கியத் திறனாய்வியலும் இலக்கிய இயக்கக் கொள்கைகளும்

உ.கருப்பத்தேவன்

இலக்கியத் திறனாய்வியலும் இலக்கிய இயக்கக் கொள்கைகளும்

உ.கருப்பத்தேவன்



மேலை இலக்கியத் தாக்கத்தினால் உலக நாடுகளின் படைப்பிலக்கியத்தை அதன் நோக்கத்தை அடியொற்றி, இலக்கிய ஆர்வலர்களும் வாசகர்களும் எப்படிப் படித்துச் சுவைக்க வேண்டும் என எடுத்துக்காட்டும் முறையில் தோன்றியதே 'இலக்கியத் திறனாய்வு'த் துறையாகும். இந்நூல் படைப்பிலக்கியத்தைத் திறனாய்ந்து அதன் உட்பொருள் விளக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இதுவரை தமிழில் வெளிவந்துள்ள இலக்கிய இயக்கங்கள் குறித்த நூல்கள், இலக்கிய இயக்கங்களின் வரலாற்றினையே எடுத்துரைக்கின்றன. இலக்கிய இயக்கங்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டவில்லை. இதனை உணர்ந்த இந்நூலாசிரியர், இலக்கிய இயக்கங்களின் கொள்கைகளை முதலில் சுட்டி, அதன் பின்னர் அவ்வியக்கங்களின் வரலாற்றினைக் கூறுகின்றார். தமிழ் இலக்கியப் படைப்புகளிலிருந்து ஒவ்வொரு இலக்கிய இயக்கத்திற்கும் தக்க உதாரணங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

- முனைவர் நா.நாகலிங்கம்

ISBN: 978-81-907706-4-4

கற்பகவள்ளி பதிப்பகம்
3-1/6, விஸ்வநாதபுரம்,
மதுரை - 625 014.

# இலக்கியத் திறனாய்வியலும் இலக்கிய இயக்கக் கொள்கைகளும்

முனைவர் உ.கருப்பத்தேவன்

முதல்பதிப்பு : டிசம்பர் 2017 •
பக்கம்: 364 • அளவு: 1x8 டெம்மி
கணினி: பி.கி.ராம்குமார்
அச்சு: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ் & ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை.

ISBN: 978-81-9077-06-4-3

வெளியீடு:
கற்பகவள்ளி பதிப்பகம்
3-1/6, விஸ்வநாதபுரம்,
மதுரை - 625 014.

விலை: ரூ. 250.00

## அணிந்துரை

முனைவர் நா.நாகலிங்கம்
உதவிப்பேராசிரியர்
முதுகலைத் தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி
மேலூர் - 625 106, மதுரை மாவட்டம்.

இந்திய விடுதலைப் போராட்டம் உச்சநிலையில் இருந்த காலத்தில் 'பாஞ்சாலி சபதம்' என்னும் குறுங்காப்பியத்தைப் படைத்த மகாகவி பாரதியார்,

"அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலர்"

என்று இலக்கியப் படைப்பினைப் படித்துச் சுவைக்கும் முறையினைப் பற்றிக்கூறினார். இது படைப்பிலக்கியத்தின் நோக்கத்தைக் கூறுவதன்று: படைப்பிலக்கியத்தைத் திறனாய்ந்து அதன் உட்பொருள் விளக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. மேலை இலக்கியத் தாக்கத்தினால் உலக நாடுகளின் படைப்பிலக்கியத்தை அதன் நோக்கத்தை அடியொற்றி, இலக்கிய ஆர்வலர்களும் வாசகர்களும் எப்படிப் படித்துச் சுவைக்க வேண்டும் என எடுத்துக்காட்டும் முறையில் தோன்றியதே 'இலக்கியத் திறனாய்வு'த் துறையாகும்.

'திறனாய்வு' என்பது உலகில் தோன்றிய அனைத்து அறிவுத் துறைகளுக்கும் (Epistemology) பொதுவான ஒன்று. ஆயினும், 'திறனாய்வு' என்னும் கருத்தாக்கம் (Concepts) இலக்கியத்தில் பன்முகச் சிந்தனைகளைக் கொண்டது. 'இலக்கியம்', 'திறனாய்வு', 'இலக்கியத் திறனாய்வு' என்னும் மூன்றும் தனித்தனி வரையறைகளைக் கொண்டவை. அவை நுட்பமானவை. இலக்கியத்தை இப்படித்தான் படைக்கவேண்டும்? எனப் படைப்பாளிகளுக்கு நிபந்தனைகளை விதிக்கமுடியாது. அதே போன்று படைப்பிலக்கியத்தை இப்படித்தான் சுவைக்கவேண்டும் என வாசகர்களை அறிவுறுத்தவும் இயலாது. படைப்பாளிக்கும் வாசகனுக்கும் இடையே இணைப்புப் பாலமாக நின்று, படைப்பிலக்கியத்தின் பயன், பயன்பாடு, தரம், நிறைகள்,